4. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் agenda–வின்படி அவையை நடத்திக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ் அறிக்கைகளை அளித்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகும், நீங்கள் எழுந்து நின்று பிரச்சினைகளைக் கிளப்பிக் கொண்டிருப்பதில் என்ன நியாயம் இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை, இல்லை, zero hour முடிந்துவிட்டது. (குறுக்கீடு) இல்லை, எந்த விதியின்கீழ், எந்த முறையில், நீங்கள் இந்தப் பிரச்சினைகளைக் கிளப்புகிறீர்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடு) எந்த அடிப்படையில் நீங்கள் இப்போது பேச வாய்ப்புக் கேட்கிறீர்கள்? (குறுக்கீடு) Zero hour முடிந்துவிட்டது. (குறுக்கீடு) அதற்கு என்ன செய்வது? வாய்ப்பு இருந்தால்தான் தர முடியும்? (குறுக்கீடு) நீங்கள் கேட்கிறபோதெல்லாம் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே, நீங்கள் கேட்கிறபோதெல்லாம் வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடு) நான் இந்த அவையை உங்கள் ஒருவருக்காக நடத்தவில்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, உங்களுடைய கட்சிக்காக நான் இந்த அவையை நடத்தவில்லை. (குறுக்கீடு) இங்குள்ள 234 உறுப்பினர்களுக்கும் பொதுவாக அவர்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்காகத்தான் நான் அனுமதி அளித்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, (குறுக்கீடு) அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நான்தான் சொன்னேன். (குறுக்கீடு) அவர் பிரச்சினை என்ன என்று என்னிடம் வந்து சொல்லிவிட்டார். இன்றைக்கு பதில் ready ஆக இல்லை; நாளை என்னவென்று பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகும், நீங்கள் என்னை வற்புறுத்துவதில் என்ன நியாயம் இருக்கிறது? (குறுக்கீடு) இதற்கு ஏதாவது மருந்து இருக்கிறதா? (குறுக்கீடு) இதற்கு ஏதாவது ஒரு மருந்தை நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்? (குறுக்கீடு) ஏதாவது சொல்லுங்கள் பார்க்கலாம்? (குறுக்கீடு) இன்றைக்கு நிறைய அலுவல்கள் இருக்கின்ற காரணத்தினால், முன்னுரிமை கொடுத்து எடுத்துக்கொள்ள விஷயங்கள் நிறைய இருக்கின்ற காரணத்தினால், நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். நீங்கள் சொல்வதை என்னால் உடனே எடுத்துக்கொள்ள

2020 மார்ச் 13] [பேரவைத் தலைவர்]

முடியாது. வாய்ப்பு வருகிறபோது அதை எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) Point of order *இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) எந்த* point of order*–ம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு)*

முற்பகல் 11–55

அதையெல்லாம் நீங்கள் ஏற்கெனவே கிளப்பியாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே அதையெல்லாம் பேசி, நான் அதற்கெல்லாம் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, திரு. பிரின்ஸ், பிடிவாதமாக (குறுக்கீடு) நேற்றிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பிடிவாதமாக இந்த அவையினுடைய கவனத்தைத் திசை திருப்புகிற வகையிலும், வெளியிலே போய் பத்திரிகைகளில் இந்த அவையில் பேசியதற்கு மாறான தகவல்களை சொல்லிக்கொண்டேயிருக்கிறார். அதை என்னால் அனுமதிக்க முடியாது. நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்கள் அமருங்கள். அவ்வளவுதான் சொல்ல முடியும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் நின்றுகொண்டே இருந்தனர்.)

நீங்கள் நின்றுகொண்டே இருந்தால் நான் நடவடிக்கை எடுப்பேன்.(குறுக்கீடுகள்)இல்லை,இல்லை.எனக்குவேறுவழிஇல்லை. நான் சபையை நடத்த வேண்டுமல்லவா? மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும், நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், அமைச்சர் சொல்வதைக் கேட்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் அறிக்கைப் படித்திருக்கிறார். அதற்கு அமைச்சர் நன்றி சொல்லவிருக்கிறார். எனவே, நீங்கள் அனைவரும் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் சில பிரச்சினைகள் குறித்து இன்று கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். இன்றைக்கு உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை; அதனால், நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று பேரவைத் தலைவரே வாக்குறுதியும் கொடுத்துவிட்டார். மேலும், மாண்புமிகு உறுப்பினர்*

திரு. பிரின்ஸ் அவர்கள், இன்றைக்கே, எடுத்தே ஆக வேண்டுமென்று பேரவைத் தலைவருக்கு உத்தரவு போட முடியாது. நீங்கள் முதலில் அதைப் புரிந்துகொள்ளுங்கள். அந்த மாதிரியெல்லாம் சபையில் பேசக் கூடாது. அந்த மாதிரி பேசுவதைத் தவிர்க்க வேண்டும். நாளை எடுத்துக்கொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்ததனால் அமைதியாக உட்காருங்கள். நாளை எடுத்துக்கொள்வதற்கு பேரவைத் தலைவர் உறுதியளித்திருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் நீங்கள் நியாயத்தை எனக்காகவும் கொஞ்சம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, எனக்காகவும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் என்னவென்று சொல்லிவிடுகிறேன். இன்று காலையில் அவை நடந்துகொண்டிருக்கும்போதுதான் இதைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. இன்றைக்குத்தான் கொண்டு வந்து கொடுத்தீர்கள். இன்று அவை நடந்துகொண்டிருக்கும்போதுதான் விவரங்களை திரு. பிரின்ஸ் அவர்கள் என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் இதைத் துறைக்கு அனுப்பி, துறையிலிருந்து எனக்குப் பதில் வரவேண்டுமல்லவா! பதில் வந்தால்தானே அமைச்சரால் பதில் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் கேட்பதையெல்லாம் என்னால் அனுமதிக்க முடியாது. இது முறையல்ல. (குறுக்கீடுகள்) திரு. கரி. இராமசாமி அவர்களே, நான்உ ங்களுக்கு பல முறை சொல்லிவிட்டேன். நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு பொருள் குறித்து நீங்கள் அறிவிப்பு தரவேண்டுமென்றால், அது அன்றைக்கே எடுக்கப்பட வேண்டுமென்றால், சபை கூடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகக் கொடுக்க வேண்டும். (குறுக்கீடுகள்) 9–30 மணிக்குக் கொடுத்தீர்கள் என்றால், 10–00 மணிக்கு சபை கூடும். நீங்கள் காலையில் 9–00 மணிக்கு முன்னதாகக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் காலையில் 9–00 மணிக்கு முன்னதாகக் கொடுத்தால் உரிய துறைக்கு அனுப்பி பதில் வாங்க முடியும். 9–30 மணிக்குக் கொடுத்துவிட்டு, எல்லோரும் அவசரம் அவசரமாக உட்காருகிற நேரத்தில் கொடுத்துவிட்டு, இன்றைக்கே பதில் சொல்லுங்கள், இன்றைக்கே அனுமதியுங்கள் என்று நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது. சட்டப் பேரவைத் தலைவர்

2020 மார்ச் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

அவர்கள் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டார். தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், சொல்லுங்கள்.*

****திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதைப்போல, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், இவ்வளவு அனுமதித்து, மீண்டும் அடுத்த நாள் எடுத்துக்கொள்கிறேன் என்று சபையில் ஓர் உறுதிமொழி அளித்த காரணத்தால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சி நண்பர்கள் அவருக்கு மரியாதை கொடுத்து, இன்றைக்கு உட்காரலாம். நாளைக்கு எடுத்துக்கொள்ளவில்லையென்றால் நாம் அத்தனைபேரும் சேர்ந்து போராடலாம்.*

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் இருக்கைகளில் அமர்ந்தனர்.)

6. வனம், சுற்றுச்சூழல், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, உயர் கல்வி ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியில் கட்டப்பட்டு வரும் வனத் துறை தலைமை அலுவலகக் கட்டடங்களுக்கான உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக 22.75 கோடி ரூபாயும், வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் விலங்குகள் உலாவிட உலகம் அமைப்பதற்காக 11.5 கோடி ரூபாயும், திண்டுக்கல், சிறுமலையில் சிறு வன உயிரினப் பூங்கா அமைப்பதற்கு 10 கோடி ரூபாயும், சேலம், குரும்பப்பட்டியில் நடுத்தர வன உயிரினப் பூங்காவை மேம்படுத்த 8 கோடி ரூபாயும், வன நிலங்களில் ஏற்படும் தீத் தடுப்புப் பணிகளுக்கான கட்டமைப்பு மற்றும் அது தொடர்பான பணிகளுக்கு 23.26 கோடி ரூபாயும், மனித–யானை*